ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

**අංක 2321/63 - 2023 මාර්තු මස 02 වැනි බ්‍රහස්පතින්දා - 2023.03.02**

2321/63 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 02 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: தி.பிராலே1/8/3/60 அத்.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/2/2016/HW/322.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

**பேஸ்லைன் பாதை விரிவாக்கத் திட்டம்**
**தொடர்பாக காணி எடுத்தல் - கட்டம் III**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், திம்பிரிகஸ்யாய பிரதேச செயலாளர் பிரிவில், கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் பாமன்கடை கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் கிருலப்பனை கிராமத்தில் அமைந்துள்ளதும் நில அளவை அதிபதியினால் வரையப்பட்ட முற்பிரதி வரைபடத்தின் இல. Co 10009 மற்றும் 2022.09.13 ஆந் திகதியைக் கொண்டமைந்துள்ள இல. 1 என குறிப்பிடப்பட்ட காணித்துண்டின் விஸ்தீரணம் 0.0175 ஹெக்டயார்களாகும் அக்காணித்துண்டுகளின் விபரம் பின்வருமாறு.

01. துண்டு இலக்கம்: 1

காணியின் பெயர்: வரிப்பன இல. 10 (பகுதி) பல பொகுண புரான விகாரை வீதி; விபரம்: வீட்டுத் தோட்டம், நிரந்தர கட்டடத்தினொரு பகுதியில் உள்ளது; உரிமை கோருபவர்: தயாநந்த ஹேவா குருப்பு, கந்தேதொல தேயிலை தொழிற்சாலை, பிடபெத்தர; விஸ்தீரணம்: 0.0175 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரிமை கோருகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2023 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 24 ஆந் திகதி


*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

மு.ப. 10.00 மணிக்கு திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2023 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 10 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

பிரியந்த திசாநாயக்க,
பிரதேச செயலாளர்,
திம்பிரிகஸ்யாய.

பிரதேச செயலகம்,
திம்பிரிகஸ்யாய,
2023, பெப்புருவரி 24.

EOG 03 - 00012